# மாகாணசபை எதிர்ப்புக் கூட்டங்கள் அஸ்கிரிய பீடாதிபதி தலைமையில் 21-ம் திகதி ஆரம்பம்!

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

Nallur Branch Library

ஈழமுரசு

முரசு 3 13-8-86 புதன் (ஆடி 28 துல்ஹஜ 6) முழக்கம் 190

## ஸ்ரீமாவோ, அனுரா பேசுவர் 70 கூட்டங்களை நடத்த முடிவு

மாகாண சபைகளுக்கு எதிரான கண்டனக் கூட்டங்களை தென்னிலங்கை முழுவதும் தொடர்ச்சியாக நடத்துவதென்று நேற்று நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதன் முதலாவது கூட்டம் இம்மாதம் இருபத்தோராம் திகதி அஸ்கிரிய பீடாதிபதி தலைமையில் நுகேகொடையில் நடைபெறும். திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, திரு. அனுரா பண்டாரநாயக்கா, திரு. நாத் அமரக்கூன், திரு. பி. உடகம உட்பட பல்வேறு சிங்களத் தலைவர்களும் இக்கூட்டங்களில் உரையாற்றுவர். ஆகக்குறைந்தது எழுபது கூட்டங்களை நடத்துவதென நேற்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

★ உயர்மட்ட மாநாட்டில் இராணுவ அதிகாரி அறிவிப்பு

# வடபகுதி ராணுவம் விரைவில் சமகால தாக்குதலை நடத்தும்!

## பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கு போராளிகளே பொறுப்பேற்க வேண்டும்

(அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள முகாம்களில் இருந்து படையினர் அடுத்த சில தினங்களில் வெளியேறி முகாம்களைச் சுற்றி போராளிகள் அமைத்துள்ள பாதுகாப்பு அரண்களின்மீது ஏககாலத்தில் திடீர் தாக்குதல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைத்த நம்பிக்கையான தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இதுபற்றி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புக் கவுன்சிலின் கூட்டத்தில் இராணுவ உயர் அதிகாரி ஒருவரினால் எடுத்துரைக்கப்பட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இனிமேல் யாழ்ப்பாணத்திலுள்ள முகாம்களிலிருந்து இராணுவத்தினர் வெளியேறினால் அவர்களுக்கு என்ன இழப்புக்கள் ஏற்பட்டாலும் முகாமுக்குப் பின்வாங்கமாட்டார்கள். தீவிரவாதிகள் முகாம்களை சுற்றியமைத்துள்ள பாதுகாப்பு அரண்கள்மீது படையினர் தாக்குதலை மேற்கொண்டு அவற்றினை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவர். இந்த நடவடிக்கைகளுக்கு அப்

— 6ம் பக்கம் பார்க்க

## 152 ஈழத் தமிழ் அகதிகள் கனடா கடலில் மீட்பு

(ஒட்டாவா)

கனடா கரையோரப் பகுதி அதிகாரிகளால் சென்ற சில தினங்களுக்கு முன் மீட்கப்பட்ட 152 பேரும் இலங்கையர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு கட்டு மரங்களில் கடலில் தத்தளித்த இவர்களில் ஆறு பெண்களும் சிறுவர்களும்கூட இருநதனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் எவராலோ எங்கோவென அழைத்து வரப்பட்டு இடையில் கடலில் கைவிடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இவர்கள் தமிழ் அகதிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனையில் நேற்றும் ஊரடங்கு

## வர்த்தகர் கொலை; நான்கு முஸ்லிம்கள் சூட்டுக்கு பலி!

(கல்முனை)

கல்முனையில் கடத்திச் செல்லப்பட்ட ஜோதி ஸ்ரோர்ஸ் உரிமையாளா சின்னத்தம்பி கொலை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு இனம் தெரியாதவர்கள் மேற்கொண்ட தாக்குதலொன்றில் நான்கு முஸ்லிம்கள் மரணமாக நேர்ந்தது.

வைக்கல் லொறியில் சென்ற தமிழ் கிளீனர்ஒருவர் கடத்தப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. சுமார் ஆறுயிரம் தமிழர்கள் அகதிகளாக பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளதாக

— 6ஆம் பக்கம் பார்க்க

திருமலையில் 8 மணி நேரம் புலிகள் பயங்கர மோதல்

## ராணுவத்தை விரட்டி ஓட்டினர் பொம்பர், ஹெலி தாக்குதல்!

(திருமலை)

திருமலையின் 13ம் கட்டை ராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட சுமார் நூறு இராணுவத்தினர் தம்பலகாமத்தைச் சுற்றிவளைப்பதற்காக நேற்று முன்தினம் மாலை புறப்பட்டபோது கோணேசர் கோவில் முன்பாக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியாகினர்.

சம்பவம் நடந்த இடத்திலிருந்து சொர்ணபால என எழுதப்பட்ட தலைக் கவசம் ஒன்றையும், ஏ. கே. ரைபிள், ரவைக்கூடு ஆகியவற்றையும் புலிகள் மீட்டுள்ளனர்.

நேற்றுக்காலை மீண்டும் இராணுவத்தினர் நான்கு பொம்பர் விமானங்கள், ஹெலிகப்டர்கள் மூலம் தாக்குதல் நடத்திக் கொண்டு நடைபவனியாகவும் தம்பலகாமத்தை நோக்கி வந்தபோது புலிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தினர். இதன்போது ராணுவத்தில் பலர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டு மணி நேரத் தாக்குதலின் பின்னர் "எம் 16" எறிகுண்டுகளையும், ஏ. கே. ரைபிள்களையும் போராளிகள் கைப்பற்றினர்.

## சாராயமும் சிகரட்டும் 'சென்றி'யில் பறிக்கப்பட்டன

யாழ்.கோட்டையில் லொறிகளுக்கான பாஸ் பெறுவதற்காக சென்ற சிலர் அங்குள்ளவர்களுக்கு 'பரிசாக' வழங்குவதற்கென எடுத்துச் சென்ற பல சாராயப் போத்தல்களும் சிகரட் பைக்கட்டுக்களும் போராளிகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. நேற்று நண்பகலுக்குப்பின்னர் கோட்டைக்குள் பாஸ் பெறுவதற்கு சென்றவர்களை சென்றிகளில்வைத்து புளொட் போராளிகள் பரிசோதித்தபோதே இந்தப் பரிசுப்

—6ம் பக்கம் பார்க்க

புதிய அரசாங்க அதிபர்கள்

## கிளிநொச்சிக்கு 'செந்தில்' முல்லைத்தீவுக்கு 'பொன்னர்'

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு. ஜெகா செந்தில்நாதன் கிளிநொச்சி அரசாங்க அதிபராக உடனடி நியமனம் பெற்றுள்ளார்.

இவர் முல்லைத்தீவில் கடமையாற்றுவதற்கு முன்பு மன்னார் அரசாங்க அதிபராக மூன்று வருடங்களுக்கு மேல் கடமையாற்றினார். இதுவரை கிளிநொச்சி பதில் அரசாங்க அதிபர் பொறுப்பையும் வவுனியா அரசாங்க அதிபர் திரு. ஸி. லோகேஸ்வரன் வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முல்லைத்தீவு

—6ம் பக்கம் பார்க்க

கந்தர்மடத்தில்

## வனவிலங்கு சரணாலயமும் சிறுவர்களின் பூங்காவும்

யாழ்ப்பாணத்தில் கந்தர்மடத்திலுள்ள அரசடி வீதியில் வனவிலங்குகள் சரணாலயமும், சிறுவர் பூங்காவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மான், மரை, குரங்கு, கரடி ஆகிய மிருகங்கள் உட்பட பல வகையான பறவைகளும் இங்கு வளர்க்கப்படுகின்றன. குட்டி யானை ஒன்றும் விரைவில் இங்கு கொண்டுவரப்பட

—6ம் பக்கம் பார்க்க

புதிய மாணவர் அமைப்புக்குழு அறிக்கை:

## கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடின் நாம் தொடர்ந்து போராடுவோம்!

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ராக்கிங் சம்பவம் தொடர்பாக சில அமைப்புகள் மேற்கொண்ட பிரசாரத்துக்கு மறுப்பு தெரிவித்து இதுபற்றிய உண்மை நிலையை விளக்கி நேற்று உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் ராக்கிங் என்பது உடலியல் ரீதியாகவோ உளவியல் ரீதியாகவோ ஒருவர் பாதிப்படையாதிருக்கும் வரை பாரதூரமானதன்று. புதிய மாணவரும் சிரேஷ்ட மாணவரும் புரிந்துணர்வு அடிப்படையில் பழகுவதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது. இதற்கு மேலாக ராக்கிங் என்ற போர்வையில் நடத்தப்படும் பலாத்கார பிரயோகங்கள், அச்சுறுத்

—6ம் பக்கம் பார்க்க

**வரி விளம்பரம்**

### காணி விற்பனைக்கு

ஆவரங்கால் சந்தைக்கு அருகாமையில் 25 பரப்பு தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மல்லிகா ஸ்ரோஸ், ஆவரங்கால், புத்தூர்.

---

## மாணவிகள் அறையில் கைவரிசை

(சுழிபுரம்)

மருத்துவத்துறை மாணவிகள் இருவர் தங்கியிருக்கும் வீடொன்றினுள் இரவு நேரம் உட்புகுந்த இனந்தெரியாத நபர்கள் அவர்களின் உடுபுடவைகளையும், ரூபா மூவாயிரம் பெறுமதியான புதிய "ஏசியா" சைக்கிளையும் ரொக்கப் பணம் நூறையும் திருடிச் சென்றுள்ளனர்.

மூளாய் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவிகளான செல்விகள் சுபாஷினி, சாந்தினி ஆகியோரின் பொருட்களே இவ்வாறு திருடிச் செல்லப்பட்டுள்ளன.

பெருமளவில் குறைந்திருந்த திருட்டுச் சம்பவங்கள் இப்போது ஊர்தோறும் ஆங்காங்கே மீண்டும் தலை தூக்கத் தொடங்கியுள்ளமை குறித்து மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

## இன்று சந்திப்பு

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட 693 சனசமூக நிலையங்களினதும் வருடாந்த அரசநன்கொடையைக் கூட்டித்தரும்படி கோரியும், இதுவரை காலமும் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகங்களில் கொடுபடாது உள்ள நிலுவையாக இருக்கும் அரசநன்கொடையைத் தாமதமின்றி வழங்குப்படியும் சனசமூகநிலையங்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட தருமஸ்தாபனங்களுக்கும் வழங்கப்படுவது போல் சலுகை அடிப்படையில் மின் கட்டணம் அறவிட வேண்டுமெனக் கோரியும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் அவர்களை இன்று புதன்கிழமை காலை நேரில் சந்தித்து உரையாடவுள்ளது.

## நிர்வாகிகள்

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு பாவனையாளர் பாதுகாப்புச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது. நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. பாலசுப்பிரமணியம் செயலாளர்: திரு. வி. கே. காராளசிங்கம் உபசெயலாளர்: திரு.கே.எஸ். நடராசா, பொருளாளர்: திரு. மு. விஜயரத்தினம்.

## மின் விநியோகமில்லை ஆனால் சிட்டை தேடி வருகிறது

(வேலணை)

நயினாதீவு கிராமத்திற்குக் கடந்த எட்டு மாதத்திற்கு மேலாகத் தொடர்ச்சியாக மின்சார துண்டிப்பு ஏற்பட்டுள்ளது நயினாதீவிற்கு இலங்கை மின்சாரசபை ஜெனறேற்றர் மூலம் மின்சாரம் வழங்கி வருகின்றது. இந்த ஜெனறேற்றர் இயந்திரம் செயல்படாமையும், டீசல் தடையுமே இதற்கு காரணம் என அறிய முடிகின்றது.

இந்த கிராமத்திற்கு இவ்வளவு நீண்ட நாட்களாக மின்சார விநியோகம் இன்றியுள்ளதனால் கிராமம் இருளில் மூழ்கியுள்ளது பல அத்தியாவசிய சேவைகள் இதனால் தடைப்பட்டுள்ளன.

இது இவ்விதம் இருக்க, மின்சாரம் உள்ளவர்களுக்கு மண்ணெண்ணை முத்திரை விநியோகிக்கப்படுவதில்லை. இந்த நீண்டகால மின் தடையினால் நயினை மக்கள் மின்சாரமும் இன்றி மண்ணெண்ணை முத்திரையும் இன்றி இரண்டும் கெட்ட நிலையில் அல்லல்படுகின்றார்கள்.

மின் விநியோகம் இல்லாவிட்டாலும் மாதாந்தம் மின் பாவனையாளர்கள் தலா இருபது ரூபா இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியுள்ளது. நயினாதீவு மக்களின் பெரும் குறையை நீக்க இலங்கை மின்சாரசபையினர் உடனடி நடவடிக்கைமேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது விடயத்தில் மின்சாரசபையினர் அதிக அக்கறை செலுத்தி இக்குறையினை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டும். மின்சார விநியோகம் இன்றி இருக்கும் போது மாத மாதம் மின்கட்டணத்திற்கான சிட்டை வீடு தேடி வந்து விடுகின்றது. நயினாதீவு அரசினர் ஆஸ்பத்திரி, நயினை அம்மன் ஆலயம் என்பன தனிப்பட்ட ஜெனறேற்றர்களை உபயோகித்து வருகின்றன.

## மிஞ்சிய கள் மூலம் பயன்பாடு

(வேலணை)

வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தினர் தமது கிளை விற்பனவு நிலையங்களில் விற்பனையாகாது மிஞ்சிய கள்ளினை திரும்பவும் பெற்று அதனை வேறு விதமான தயாரிப்புக்களைச் செய்து விற்பனை செய்ததன் மூலம் இலாபம் பெற்றுள்ளது.

இந்த இலாபத்தினை பங்கீடு செய்து மேற்படி தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளது. விற்பனையாகாது வெளியே ஊற்றவேண்டிய கள்ளினை இப்படியாக உபயோகமுள்ள உற்பத்தியொன்றை செய்து இலாபம் ஈட்டிக் கொடுத்ததற்காக மேற்படி சங்கத் தலைவர் திரு. செ. அரசரத்தினத்தை சங்க ஊழியர்கள் பாராட்டுகின்றார்கள்.

## அங்கீகாரம்

(வேலணை)

உள்ளூரில் உற்பத்தி செய்யும் ஆயுர்வேத மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை வேலணை உப அலுவலகத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது வேலணை உப அலுவலகத்தினால் நடாத்தப்படும் சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கே இம்மருந்துகள் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

சுதேச மருத்துவ அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஒவ்வொன்றில் இருந்தும் இருபத்தைந்து வீதத்திற்கு உள்ளூர் சித்த ஆயுர்வேதமருந்துகளை உள்ளூர் மருந்து தயாரிப்பாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யலாமென யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையினால் சுற்று நிருபமொன்று வேலணை உப அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

---

## பிரயாண ஒழுங்குகள்

○ கனடா ○ ஈராக்

○ சவூதி அரேபியா

(1) கனடா செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடாவிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்லவிரும்புவோர் 17ம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொள்ளவும்.

(2) சவூதி அரேபியாவுக்கு விவசாய தொழிலாளர் (Labours) மேசன், தச்சுத் தொழிலாளர், எலெக்ரிசன்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர் 19-ம் திகதிக்குப் பிந்தாமல் பாஸ்போட், 6 படங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்

(3) ஈராக் நாட்டில் (Hospital Cleaners) ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் வேலைக்குச் செல்ல விரும்புவோர்க்கு மிக விரைவில் செல்ல ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட், பொன்ட் ஆகியவையும் செய்து கொடுக்கப்படும்.

இ. தேவராசா
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
(ஆஸ்பத்திரி அருகாமை)

R/24677

---

## "ரெசோ" அளிக்கும் இலவச அம்புலன்ஸ் சேவை

உயிராபத்து, அபாயகரமான சுகயீனம், விபத்து போன்ற நேரங்களில் நோயாளியை வைத்தியசாலையில் விரைவில் சேர்ப்பிக்க உடனடியாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

மாணவர் தொடர்பகம்,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

B/1456

---

# கலர்ப் படங்கள் கழுவுதலில் முன்னோடிகள்.

[Processing & Printing]

தொழில் நுட்ப வளர்ச்சியின் வேகம்...



# கொழும்பு ஸ்ருடியோ

164. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22410.

# மூன்று மாதப் பயிற்சிக்கு இஸ்ரேல் செல்ல தெரிவு

(பண்டத்தரிப்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிருவாகச் செயலாளர் திரு. த. அருணகிரிராசா "தொழிற்சங்கத்தில் கூட்டுறவு முயற்சி''க்கான மூன்றுமாத பயிற்சிக்கு இஸ்ரேல் செல்கின்ரூர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உப தலைவர் திரு. மு. பாலசுப்பிரமணியம் தலைமையில்நடந்த தமிழாசிரியர் சங்க ஆட்சி மன்றக் கூட்டத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதியாகச் செல்வதற்கு ஏகமனதாக இவர் தெரிவுசெய்யப்பட்டார்.

இப் பயிற்சி ஆகஸ்ட் மாதம் 28 ந் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 28 ந் திகதி வரை ஆசிய ஆபிரிக்க தொழிற்சங்கத்தின் இஸ்ரேலில் உள்ள பணிமனையில், நெதர்லண் நாட்டில் தலைமைப் பணிமனை வைத்திருக்கும் சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம் முழுச் செலவையும் ஏற்று நடத்துகின்றது.

இதில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் திரும்பிவரும் போது மேற்கு ஜேர்மனி, நெதர்லண், லண்டன் போன்ற நாடுகளில் தொழிற்சங்க பிரதிநிதிகளை கண்டு கலந்துரையாடும் வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது சர்வதேச சுதந்திர ஆசிரியர் சம்மேளனம்.

இலங்கை அரசோ இஸ்ரேல் அரசோ இந்த புலமைப் பரிசில் பயிற்சிக்கு ஒரு சதந்தானும் செலவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தீவுப்பகுதியில் பெரும் சங்கடம்:

# சட்டவிரோத மின்பாவனையால் மின் மாற்றிகள் எரிகின்றன

(வேலணை)

யாழ்ப்பாண குடா நாட்டின் பல கிராமம், பட்டினங்கள் ஆகியவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட விரோத மின் பாவனையை இளைஞர் அமைப்புகளின் உதவியுடன், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள், மின்சாரசபை அத்தியட்சகர்கள் ஆகியோர் தமது ஊழியர்களைக் கொண்டு துண்டித்து அவை பகிரங்க இடத்தில் வைத்து தீயிட்டுக்கொளுத்தியும் தண்டப்பணம் அறவிட்டும் வருகின்றனர்.

இச்சட்ட விரோத மின்சார பாவனையை இல்லாமற் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும இவ் வேளையில் வேலணை மின் அத்தியட்சகர் பிரிவினுள் அடங்கும் காவலூர், வேலணை, நாரந்தனை, சரவணை, கரம்பன், புங்குடுதீவு, அல்லைப்பிட்டி, வேலணைதுறையூர், மண்கும்பான் ஆகிய தீவுப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளசட்டவிரோத மின் இணைப்புக்களை துண்டிக்க இதுவரை ஒருவரும் முன்வராத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பிரிவினுள் சட்டவிரோத மின்பாவனையால் இரண்டுக்கு மேற்பட்ட மின்மாற்றிகள் முற்ருக எரிந்து விட்டதனுல் நிரந்தர மின்சாரம் பெறுபவர்கள் பலத்த சிரமம் அடைந்தனர். பின்னர் வேலணை மின்சார அத்தியட்சகர் அலுவலக அதிகாரி திரு. மா. விஜயஸ்ரீயின் பெருமுயற்சியாலும், மின் பாவனையாளர் சங்கங்களின் ஒத்துழைப்பாலும் திரும்பவும் புதிய மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது எனவே வேலணை மின் அத்தியட்சகர் பிரிவினுள் சட்ட விரோத மின்பாவனை பெறுவோரை கண்டுபிடித்து அவர்களது மின் தொடர்புகளைத் துண்டிக்க பொது நிறுவனங்கள், பொதுமக்கள், இளைஞர் அமைப்புக்கள் முன்வர வேண்டுமென வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் சண்முகதாஸ் பேச்சு:

# ஆசிரியர் உரை இல்லாதது இந்நூலின் சிறப்பம்சமாகும்

(அரியாலை)

"தமிழில் உள்ள தொண்ணூற்ரூறு வகையான பிரபந்தங்களுள பிள்ளைத் தமிழும் ஒன்ருகும். குலோத்துங்க சோழனைக் குழந்தையாகப் பாவனை செய்து ஒட்டக்கூத்தர் பாடியதே முதலாவது பிள்ளைத் தமிழ் நூல் என்பர்.

எமக்குக் கிடைக்கும் மிகப் பழைய இலக்கியங்களிலும் பிள்ளைகளைப் பற்றிப் பாடி உள்ளார்கள். வள்ளுவர் அதற்கும் தனி அதிகாரம் ஒன்றை பாடி உள்ளார். இறைவனைக் குழநதையாகவும், தன்னைத் தாயாகவும் பாவனை செய்தல், சைவ, வைஷ்ணவ அடியார்கள் பக்திப்பாடல்கள் பாடும் போதே ஆரம்பமாகியது. பிள்ளைத் தமிழில் ஆண்பால், பெண்பால் என இரு பிரிவுகள உள்ளன. ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குப் பத்துப் பருவங்கள் உண்டு. சில பருவங்கள் இரண்டிற்கும் பொதுவானவையாகும். ஒவ்வொரு பருவத்திற்கும் பத்துப பாட்டுக்கள் பாடுவார்கள். இந்நூலாசிரியர் திரு. மு. தியாகராசா அவர்கள் ஒவ்வொரு பருவத்திற்கும் மூன்று பாடலகள் பாடி உள்ளார். இந் நூலில் ஆசிரியர் உரை என எதுவும் இல்லை. இதனுல் எந்த நூலுக்கும் காணப்படாத சிறப்பம்சம் இந்த நூலுக்கு உண்டு. கந்த புராணம படித்தவர்களுக்கு இந்நூல் சுவையாக இருக்கும். இதைப் படிக்கும் போது முந்திய இலக்கிய ஞாபகங்கள் நினைவுக்கு வரும். ஆட்களாக கேசாதி பாதமாகவும், இறைவனைப் பாதாதி கேசமாகவும் வாணிப்பார்கள். ஞாயிறு திங்களுக்கு அடை கொடுப்பதில்லை. ஆனல் கடவுளர்களுக்கு அந்த உத்தரவு கொடுக்கப்பட்டுள்ளது''.

இவ்வாறு பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் கந்த புராண நவநீதம் ஆன அத்தி நல முருகன் பிள்ளைத்தமிழ் நூல வெளியீட்டு விழாவில் நூல் வெளியீட்டுரை ஆற்றும் பொழுது குறிப்பிட்டார். இவ் விழா நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திரு. என். சிவராசா தலைமையில் நடைபெற்றது. திரு. சி. தம்பிஐயா அவர்கள் மங்கல விளக்கேற்றினுர். திரு. எஸ். சடாட்சரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர். ஆதீன முதல்வர் அருளுரையில் குறிப்பிட்டதாவது:-

"இந்த மேடையில் நாலைந்து நூலகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆன்ரேர் தம் அறிவை வெளிப்படுத்தும் நோக்கமாகப் பல நூலகளை வெளியிட்டுள்ளனர். நமது சமயத்தில் பல நூல்கள் உள்ளன. அந்த நூல்களை எந்த நோக்கோடு பார்க்கிரேமோ அந்தச் செயற்பாடு எமக்குக் கிடைக்கிறது. முருகனைத் தாலாட்டும் நோக்கமாகப் பிள்ளைத் தமிழ் அமைக்கப்பட்டுள்ளது. திரு. தியாகராசா அவர்கள் புராணத்தோடு தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்'' என்ருர்.

வித்துவான் வசந்தா வைத்தியநாதன் அவர்கள் அறிமுக உரையில் குறிப்பிட்டதாவது:-

"நவநீதம் என்ருல் வெண்ணெய் என்று பொருள்படும். நவம் எனருல் புதிது. நீதம் என்ருல் எடுப்பதாகும். அத்தி முருகனுக்கு மிகவும் பிடித்த மரமாகும். அத்தி பூக்காமல் காய்க்கும். துள்ளித் திரிகின்ற இயல்புடையது மனம், உணர்வு, சென்ற வழி உடல் செல்லக்கூடாது. இது விலங்கு வாழ்க்கையாகும். அறிவு என்ற அங்குசத்தால் தடைபோடவேண்டும். ஆண்டவனை எப்போது அடைவோம் என்பதும் தாகமாகும். ஆண்டவனேடு ஒன்றிணைந்தால் நான், எனது, என்ற பற்று நீங்கிவிடும். இந் நூலாசிரியர் திரு. தியாகராசா அவர்கள் இன்றும் எழுபது பாடல்களைச் சேர்த்து நூறு பாடல்கள் பாடவேண்டும். பொருள் பூத்த பாடல்களை இக்காலம் காண்பது அரிது. இந் நூலாசிரியர் பொருள் ஆழம் உள்ள பாடல்களை ஆக்கி உள்ளார்'' என்ருர்.

நூலாசிரியர் திரு. மு. தியாகராசா அவர்கள் பதிலுரையின்போதுகுறிப்பிட்டதாவது:

"முகவுரையைப் பார்த்துத்தான் இப்போது விமர்சனம் செய்கிருர்கள். அதற்காகத்தான் எனதுரையைச் சிறியதாக எழுதினேன். சிலருக்குப் புத்தகத்தைப் பார்ததும் பயம் வந்துவிடும். அதற்காகத்தான் நூறு பாட்டுக்கள் எழுதாமல் முப்பது பாட்டுக்களை எழுதினேன்'' என்ருர்.

திரு. க. உமாமகேஸ்வரன் உரை ஆற்றினுர். திரு. வே. சிவஞானம் அவர்களின் பிள்ளைத்தமிழ் இன்னிசை நடைபெற்றது. நன்றியுரை வழங்கப்பட்டது.

# மூன்று நாள் பயிற்சி முகாம்

(நல்லூர்)

யாழ்.பரி.யோவான் கல்லூரி சாரணர் குழுவினர் மூன்று நாள் பாசறை முகாமொன்றை நல்லூர் பரி. யாக்கோபு ஜெப மண்டபத்தில் நடாத்தினர்.

இப்பயிற்சி முகாமில் சாரணர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதற்குப் பொறுப்பாக சாரணர் ஆசிரியர் திரு.எல்.அருள்தாசன் இருந்தார்.

# வீடியோ திரைப்படம் மூலம் மக்களுக்கு நல்ல கருத்துக்களை புகட்டவேண்டும்

(நல்லூர்)

"நாடக உலகில் பெரும் புகழோடு நாடகங்களை நடாத்தி புகழ்பெற்ற பலர் தமது கவனததை வீடியோ திரைப் படங்களைத் தயாரிப்பதில் செலுத்த ஆரம்பித்துள்ளனர். மேடை நாடகங்களில் சிறப்பான காட்சிகளை அமைத்துக் கொள்ள முடியாமல் இருந்த இவர்கள் சிறந்த காட்சிகளை இயற்கையாகக் கொண்ட இடங்களில் தமது நடிப்புக்களை நடித்து அவற்றை வீடியோ படமாகத் தயாரித்து மக்கள் முன்காட்ட ஏற்பாடு செய்வது வரவேற்கத்தக்கதாகும். 'தியாகச்சுடர்' மேடை நாடகத்தில்கதாநாயகனுகநடித்தும் பல போட்டிகளில் தங்கப் பதக்கங்களைபெற்றுக்கொண்ட கலைச்செல்வன் திரு. க. கிருஷ்ணராசா 'இதயம் ஒரு கோயில்' என்ற வீடியோ திரைப்படத்தில் முக்கிய கதாநாயகனுகப் பாத்திரம் ஏற்று நடிப்பது பாராட்டுதற்குரியதாகும்.''

இவ்வாறு அரியாலையில் நடைபெற்ற "இதயம் ஒரு கோவில்'' என்ற வீடியோ திரைப்பட விழாவை திரு. எஸ். பி. சிவானந்தம் ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்..

கிருஷ்ணலயா மன்றத் தலைவர் திரு. எஸ். வாமதேவன் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. எஸ். பி. சிவானந்தம் தொடர்ந்து பேசுகையில், நாடகமேடைகளில் பல நாடகங்களை நடித்து புகழ் பெற்ற பல நடிகர்கள் தமது கவனத்தை வீடியோ திரைப் படங்களை தயாரிப்பதில் செலுத்த ஆரம்பித்துள்ளனர். புதிய உத்திகளைக் கையாண்டு, சிறந்த முறையில் வீடியோப் படங்களைத் தயாரித்து மக்கள் மனதில் புதிய கருத்துக்களைப் புகுத்தும் வகையில் நல்ல கருவுள்ள கதைகளை எழுதி வீடியோ திரைப்படமாக்கினுல மக்கள் அதனை விரும்பிப் பார்க்க விரும்புவார்கள். இதன் மூலம் கலையுலகு மேலும் வளர்ச்சியடையும் என்று குறிப்பிட்டார்.

கலைச்செல்வன் க. கிருஷ்ணராசா நன்றி கூறினுர். ஏராளமானேர் வீடியோ திரைப்படவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தென்மராட்சியில் வறுமை நிவாரண முத்திரைவழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், இம் மாதம் 15ஆம் திகதிக்குள் வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும், புதிய உணவு முத்திரைகளை பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ளுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபரின் விடா முயற்சியின் காரணமாக, வட பகுதியில் வழங்கப்படவுள்ள வறுமை நிவாரண திட்டத்தின்கீழ் வழங்கப்படும் புதிய முத்திரைகள் தென்மராட்சியிலேயே முதல் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வயல்வேலை ஆரம்பம்

(சரசாலை)

சாவகச்சேரி, சரசாலை, மட்டுவில், கல்வயல், மீசாலை, தனங்களப்பு, கச்சாய், வரணி, கைதடி, மறவன்புலோ, மிருசுவில் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் மழைபெய்ததைத்தொடர்ந்து காலபோகச்செய்கைக்கு வயலை பண்படுத்தி வருகின்றனர்.

வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்தின்

# விடுதிக் கட்டட வேலைகள் ஸ்தம்பிதமடையும் நிலையில்

தெல்லிப்பளையில் கட்டப்பட்டுவரும் வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்தின் விடுதிக் கட்டட வேலைகள் போதிய நிதி உதவி இன்மையால் அரைகுறையில் ஸ்தம்பிதமடையக் கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது.

புற்றுநோயைக் குணப்படுத்த முடியாத நிலையை அடைபவர்கள் கடைசிக்காலத்தில் அவலப்படாமலும், சௌகரியமாகவும் காலம்கழிப்பதற்கு வசதியாகவே இப் புற்றுநோய் விடுதி அமைக்கப்படுகிறது.

தெல்லிப்பளையில் இதற்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட பதினைந்து பரப்புக் காணியில் இருபத்தைந்து முதல் முப்பது வரையிலான நோயாளர்களை வைத்துப் பராமரிக்கக் கூடியதாக இதற்கான கட்டட வேலைகள் சில மாதங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு சுமார் 20-25 இலட்சம் ரூபா தேவைப்படுமென மதிப்பிடப்பட்டது.

எனினும் வெளிநாடுகளிலிருந்தும், உள்நாட்டிலிருந்தும் எதிர்பார்க்கப்பட்ட நிதிஉதவிகள் கிடைக்காமையால் இதற்கான கட்டடவேலைகள்ஸ்தம்பிதமடையலாம் என அஞ்சப்படுகிறது.

எனவே, இப் பணியைப் பூர்த்தி செய்வதற்கு பண உதவி செய்யும்படி பொதுமக்களிடம் வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் மா. ஜெகநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்காக காசோலை அனுப்புபவர்கள் "வடமாகாண புற்றுநோய்ச் சங்கம்'' என்ற பெயரிற்கு காசோலை அனுப்பலாம் எனவும், அமையப்போகும் மருத்துவமனையில் தங்கள் அன்புக்குரியவரின் நினைவாக ஓர் அறை அமையவிரும்பின் முப்பதினுயிரம் ரூபா வழங்குமாறும், அன்பளிப்புக்கள் பற்றிய சகல விபரங்களுடனும் நினைவுப் படல் பொறிக்கப்படுமெனவும் டாக்டர் ஜெகநாதன் தெரிவித்துள்ளார்.

# விருந்துபசாரம்

(வேலணை)

வேலணை சேர் வைத்திலிங்கம் மத்திய மகா வித்தியாலய உயர்வகுப்பு மாணவர் மன்றத்தினரின் தேநீர் விருந்துபசார வைபவம் செல்வன் கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் மேற்படி வித்தியாலய அதிபர் திரு. மு. சிவராசரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

# அகதிகளுக்கு உதவி

(வேலணை)

மன்னுர், பகுதியில் நடைபெற்ற அரசபடையினரின் தாக்குதல்களுக்கு இலக்காகி வீடு, மற்றும் சொத்துக்களை இழந்து வேலணைப் பகுதிக்கு அகதிகளாக வந்த குடும்பத்தினருக்கு புங்குடுதீவு வெகுஜன விழிப்புக் குழுவினர் சமையல் பாத்திரங்கள் வாங்குவதற்கு தெனநிதியுதவிகளுளும் வழங்கியதுடன் உணவுப பொருட்களும்அன்பளிப்பாக வழங்கினர்.

ஈழமுரசு

உதய சிந்தனை

நமது நாட்டில் இருக்கும் இலட்சக் கணக்கான ஏழை மக்களின் துயரங்களையும் துன்பங்களையும் நினைத்து உண்மையில் கண்ணீர் விடுபவர்கள் எத்தனை பேர்?

—சுவாமி விவேகானந்தர்

40, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 22437

## இதய ஒலி

13-8-86 புதன்கிழமை (அக்ஷய) ஆடி 28

# மனித உயிர்களுடன் விளையாடும் விரோதிகள்

வட பகுதியின் பல்வேறு நெருக்கடிகள் காரணமாக, மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள அத்தியாவசிய சேவை நிறுவனங்களில் ஒன்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி என்பதை அனைவருமே அறிவர்.

வடமாகாணத்தின் ஒரேயொரு பிரதான வைத்தியசாலையாக இதுவே விளங்குகின்றது.

சிறுவர் நோய், மகப்பேறு, முறிவு தறிவு, மூளை, நரம்பு, சத்திரசிகிச்சை, போன்ற இன்னோரன்ன சிகிச்சைகளுக்கும் சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலையாக இது இருப்பதனால் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை என்று வடமாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் அவசர நோயாளர்கள் இங்கேயே அனுப்பப்படுகின்றனர்.

பாதுகாப்புக் காரணத்தால் மன்னாரிலிருந்தும் தமிழ்பேசும் நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கே இடமாற்றம் செய்யப்படுவது இப்போது வழக்கமாகியுள்ளது.

சாதாரணகால நோயாளர்கள் அனுமதியைவிட, இன்றைய காலகட்டத்தில் அசாதாரணமாக இடம்பெறும் சம்பவங்களால் பாதிக்கப்படும் தமிழ் மக்களின் அனுமதியை கட்டுப்படுத்த முடியாத நிலை இப்போது யாழ். ஆஸ்பத்திரிக்கு ஏற்பட்டுள்ளது.

இடவசதி, படுக்கைவசதி என்பவைகளைவிட இரத்தம், ஒக்ஸிஜன் சிலிண்டர், அத்தியாவசிய மருந்து வகைகள் போன்றவைகள் மிகப்பெரிய சவாலாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் தினசரி நிர்வாகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆஸ்பத்திரி சுப்பிரின்டனட், டாக்டர்கள், தாதிகள், மற்றும் ஊழியர்கள் எவ்வளவுதான் அதித அக்கறையுடன் தமது சேவையைச் செய்தாலும், கொழும்பிலிருந்து வந்துசேரவேண்டியவை உரிய காலத்தில் வராவிட்டால் அவர்கள் என்ன செய்ய முடியும்?

ஒக்ஸிஜன் சிலிண்டர்களையும், மருந்து வகைகளையும் இங்கு எடுத்துவர ஆஸ்பத்திரி நிர்வாகம் எதிர் கொள்ளும் கஷ்டங்களை தினசரிப் பத்திரிகைகளைப் படிப்பவர்கள் நன்கு அறியமுடியும்.

ஐந்து லொறிகளில் ஏற்றக் கூடிய மருந்து வகைகள் ஆனையிறவுககு ஊடாக கொண்டுவர முடியாததனால் வவுனியாவில் பல நாட்களாக 'தவம்' இருப்பதை ஈழமுரசு செய்தியாக வெளியிட்டிருந்தது.

இவ்வாறான ஒரு நெருக்கடி நிலையான காலகட்டத்தில், யாழ். ஆஸ்பத்திரியில் இருக்கும் அற்ப சொற்பமான மருந்துகளை சில சுயநலமிகள் களவாடி விற்கும் கேவலமான செயலில் ஈடுபட்டிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்தி, மனித உயிரை நேசிக்கும் அனைவரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியின் 'அவசர மருத்துவப் பிரிவு' என்ற அடிக்குறிப்புடன், "மருந்துக் களவை ஒழிப்போம்" என்ற தலைப்பில் ஒரு பிரசுரம் வெளியாகியுள்ளது.

"மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள மருத்துவச் சேவையைச் சீர்குலைக்க தீயசக்திகள் ஈடுபட்டுவருவதாகவும், மருத்துவமனைகளில் மிகுந்த சிரமத்துடன் சேகரிக்கப்பட்ட மருந்துப் பொருட்களைக் களவாடி விற்கும் கேவலமான செயலில் சிலர் ஈடுபட்டு வருவதாகவும்" இந்தப் பிரசுரம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஆஸ்பத்திரி மருந்துக் களவில் ஈடுபட்டவர்கள் யார் என்று கூறாமல் 'சிலர்' என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இவர்கள் யார் என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

'உள் வீட்டுக் கள்வர்'களே இந்தப் 'புனித பணி'யைச் செய்துவருகின்றனர்.

சில தனியார் மருந்து விற்பனை நிலையங்கள் இவ்வாறு களவாடப்படும் மருந்துகளை பணம் கொடுத்து வாங்குவதாகவும் இந்தப் பிரசுரத்தில் சொல்லப்படுகின்றது.

சுருக்கமாகவும், விளக்கமாகவும் சொல்வதானால், மிகவும் சிரமத்தின் மத்தியில் யாழ். ஆஸ்பத்திரிக்குக்கொண்டு வரப்படும் மருந்துகள், இங்குள்ள சில ஊழியரால் களவாடப்பட்டு, தனியார் மருத்துவ விற்பனை நிலையங்களுக்கு விற்கப்படுகின்றன.

இவைகள் நோயாளர்களுக்கு யானை விலை, குதிரை விலைக்கு விற்கப்படுகின்றது.

மனித உயிர்களுடன் விளையாடி, வயிறு வளர்க்கும் இந்தச் "சமூக விரோதி"களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்?

பொதுமக்கள் தான் தீர்ப்பு வழங்க வேண்டும்!

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்
ஜூலை மாத "காங்கிரஸ் நியூஸ்" இதழின்
ஆசிரிய தலையங்கத்தின் மொழிபெயர்ப்பு

# இனப்பிரச்சினையில் தொழிலாளர் காங்கிரஸின் பார்வை

இலங்கையில் தமிழ்ப்போராளிகளுக்கும் சிங்கள அரசாங்கத்திற்கும் இடையே யுத்தமொன்று சில காலமாக நடந்துவருகிறது. இது மனித இனங்கள் இரண்டுக்கிடையே நிகழும் ஒரு மோதல் என விபரிக்கப்பட்டுள்ளது; இது தவறு மானிடவியல்வாரியாக, இலங்கை வாழ் சிங்களவர்களும் தமிழர்களும் ஒரே மனித இனத்தவர்களே, முன்னரும் இதனை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

தமிழர்–சிங்களவர் மோதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க, இலங்கை அரசு சில பிரேரணைகளை முன்வைத்துள்ளது. இப்பிரேரணைகள் அல்லது ஆலோசனைகளின் பால் பல்வேறு அரசியல் கட்சிகளும் இறுதியில் எப்படியான மனப்பான்மை பாராட்டும்? இதனை இப்பொழுதே தீர்க்கமாகக் கூறிவிடும் படியாக இல்லை.

திரும்பவும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் 'ஒரே மனித இனம் சேர்ந்தோரே' என்ற விடயத்திற்கு வருவோம். இவர்கள் இருபேருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் கலாசாரம், சமயம் மொழி என்பன தொடர்பானவையேயாகும். இலங்கையர் எனும் சமுதாயத்தின்மத்தியில்தீவிரவித்தியாசங்களை வளர்த்துவிடுதலில் சில ஆட்கள் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தனர். இத்தீவிலுள்ள மக்கள், பல மனித இனங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களது சமயங்கள் பல. அவர்கள் பல்வேறு குலத்தினர். அவர்கள் பேசும் மொழிகளுமோ அனேகம். இம்மக்கள் மத்தியிலுள்ள வேறுபாடுகளைக் கூர்மையாக்கிவிட விரும்பிய இந்த ஆட்கள், 'மனித இனம்' எனும் அம்சத்தையும் இம்மோதலுக்குப் புகுத்தினர். இவ்வரசியல் விஷமத்தனம் வெற்றிகண்டு உள்ளது. சிங்களவர், தமிழர் என்ற சாதியும் மனித இனம் என்பதும் ஒரே அர்த்தபுஷ்டி உள்ளன என இந்த ஆட்கள் விளக்கினர். இந்தச் சுலபமான முறையின் வாயிலாக, சாதிப் பிரச்சினை ஆபத்தான ஒரு மனித இனப் பிணக்கு ஆக்கப்பட்டது.

இன்று, இதன் பொருள் யாது? மனித இனம் என்பது சாதி என்ற அர்த்தத்தோடு மட்டுப்பட்டு நின்றுவிடவில்லை. சாகியம், மொழி, சமயம், குலம், போலும் பல வேறுபட்ட அம்சங்கள் இந்தக் கருத்திடனுள் அடங்கும். மேற்கு நாடுகளின்றும் வந்துள்ள பண்டிதர்களும், அந்நாடுகளில் பயிற்றப்பெற்ற பண்டிதர்களும் இது விடயமாக நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளனர். மானிடவியல் வேறுபாடுகளையும் தாண்டி மனிதராகப் பிறந்தோர் மத்தியில் நிலவும் பெரும் வேறுபாடுகள் எல்லாவற்றையும் அவர்கள் 'மனித இன' வேற்றுமைகள் ஆக்கிக்கொண்டனர்.

இன்றெல்லாம் அபிவிருத்தி குறைந்த நாடுகளை அப்படியே அழைப்பதில்லை. அவற்றை அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்றோ, வளர்முக நாடு எனவோ, மூன்றும் உலக நாடு எனவோ பெயரிட்டு நாம் வழங்குகிறோம். சரி, மூன்றும் உலக நாடுகள், மூன்றும் உலக மக்கள் ஆகியோர் தொடர்பில் மனித இனம் எனும் பதம் தாராளமாகப் பிரயோகமாகி வருகிறது. இலங்கைத் தேசமும் இப்பிரயோகத்திற்குப் பலியாகியுள்ளது. அவ்வளவு தான் நடந்தது.

அபிவிருத்தி குறைந்த தேசத்தவர்கள இச்சொற்சாடுதலுக்கு எதிராகப போராடுவது சாத்தியமாகாது. இந் நிலைமையில் ஆகக் கூடியதாகச் செய்யக் கூடிய முயற்சி, இன்ன வழியிறதான்என்பதைக் கண்டு கொள்ள முடியும். இலங்கைத் தீவு இப்பொழுது உள்ளூர்ப் பிணக்கு,பூசல்வயமாகி அல்லற் படுகிறது. இங்கு தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை என்பவற்றுக்கு வழிவகுக்க விரும்பும் நிதான புத்தி வாய்ந்தோர், ஒன்று செய்யலாம். மனித இனம் எனும் வகையில், நீங்கள் அனைவரும் ஒன்றே என. சிங்களவர், தமிழர், முஸ்லிம்களிற் பெரும்பாலானோர்,ஆகியோரிடம் அவர்கள் போதிக்கலாம்.

இப்பிரச்சினைத் தீர்வின் பொருட்டு, ஆகக் கடைசியாக இலங்கை அரசு முன்வைத்த பிரேரணைகளுக்கு வருவோம். பிரேரணைகள் அல்லது ஆலோசனைகளை அலசி ஆராயவென ஒரு பலகட்சி மாநாட்டை அண்மையில் இந்த ஐ.தே.க. அரசாங்கம் ஒழுங்கமைத்தது. ஐ.தே.க. அரசின் தலைவர், ஜனாதிபதியே கட்சிகளுக்கு அழைப்புகள் விடுத்தார். அப்படி அழைப்புப் பெற்றவர்கள் (பதினொரு கட்சிகள்) மாநாட்டிற்கு வரலாம், கலந்துரையாடல்களிற் பங்கு பறறலாம், எனப்பட்டது. மூன்று கட்சிகள் பங்குபற்ற மறுத்து விட்டன. அவையாவன தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மஹஜன எக்ஸத் பெரமுன (மக்கள் ஒற்றுமை முன்னணி) ஆகியனவாம்.

மாநாட்டிற் பங்குபற்றிய எட்டுக் கட்சிகளாவன: ஐக்கிய தேசியக் கட்சி, இலஙகைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை கொமியூனிஸ்ற் கட்சி (மொஸ்கோ), சிறீலங்கா மஹஜன கட்சி, நவ லங்கா சம சமாஜக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகியனவாம்.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள், இந்தியத் தென்முனை மாநிலமாகிய தமிழ் நாட்டின் சென்னை மாநகரில தற்போது வதிவிடம் கொண்டுள்ளனர். தாம் மாநாட்டிற் பங்குபற்றுவது உசிதமாகாது என்ற அவர்கள், அதற்குப் பல காரணங்களையும் காட்டினர். சிறீ ல. சு. க. மாநாட்டிற்குச் சமுகமளிக்க மறுத்தது. ஆயினும் அதற்கு முன்னரோ அலலது மாநாடு முடிந்த பின்னரோ மாநாட்டு முதலவராகிய ஜனாதிபதியைச் சந்திக்க விரும்பியது. எனவே, மாநாடு முடிநத பிறகு திருமதி சிறிமாவோ பணடாரநாயக்கவின் தலைமையில், பிறகு சிறீ ல. சு. க. அவரைச் சந்தித்தது மஹஜன எகஸத் பெரமுன, ஒருமவளை சிறீ ல. சு. க. வின் வழி நடந்து கொள்ள விரும்பிப்போலும், மாநாட்டுக்குச் செல்லாது விடுத்தது. இரு இனங்களுக்கு இடையே சுமுக உறவுகள் வரண்டு வற்றிப்போயிருந்த இடைவெளிக் காலத்தின் போது தாமும் வனந்தரவாசம் மேற்கொண்டு இருந்தனர், இநத எம். ஈ. பி. உறுப்பினர்கள்.

இனி, மாநாட்டிற்கு வருகை தந்திருந்த எட்டுக் கட்சிகளின் தூதுககுழுக்களும் 1986, ஜூலை இரண்டாம், மூன்றும், ஏழாம் திகதிகளில் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினார்கள். அவ்வேளை அரசின் மூன்று அமைச்சர்கள், காமினி திசாநாயக்க, டபிள்யூ. தேவநாயகம், ஏ. சி. எஸ். ஹமீட் ஆகியோர் ஜனாதிபதியுடன், அவருக்குத் துணையாக, இருந்தனர். இக்கட்சிப் பிரதிநிதிகளின் சிபார்சுகளைக் கருததிறகொள்ள விருப்பம் கொண்டவர்களாக ஜனாதிபதியும் அவரது மூன்று சகாக்களும் தோன்றினார்கள். இவ்வாறு இப்பிரதிநிதிகள் திருப்தி தெரிவித்தனர். பிரேரணைகளின் அமுலாக்க விளைவுகள் நிலைத்து நிற்கவல்லன ஆதல் வேண்டியே சிபார்சுகள் அமைத்திருந்தன. புதிய அரசியலமைபபுச் சட்டத்தின் ஒருமைப்பாட்டுக் கட்டுக்கோப்புக்குக் குந்தகம்விளையாதிருக்கும் அளவுககு இச்சிபார்சுகள் கருத்திற் கொள்ளப்படலாம் என அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (தொடரும்)


உ

முருகா

நல்லூர் கந்தசுவாமி கோயில்
மஹோற்சவம் - 1986
இன்று நான்காம் திருவிழா
காவடிச் சிந்து



சேவலாம் கொடியும் மயில் நீலவா கனமுங்கொண்ட
தீரமிக்க கந்தன் அருளாளன்—நல்லூர்
ஆலயத்தைத் தேடிவந்த தாளன்—அவன்
வேலும் முகம் ஆறும் திரு நீறும் முது சூரன்குடி
வெற்றி கொண்ட தோள்வலியும் பாடு—வினை
முற்றும் அணு காதுவிரைந் தோடும்!

B/1449

எந்தை கந்தவேளைப் பிரார்த்தித்துப் பிரசுரிப்பவர்கள் — 'ரெலிகுளோப்'



# சுவாமி சித்பவானந்தர்
## தோற்றமும் பூர்வாச்சிரமும்

தென்பாரதத்திலே கொங்கு மண்டலத்திலே கோவை மாவட்டத்திலே பொள்ளாச்சி நகரினணித்தாயமைந்த செங்குட்டை பாளையம் என்னும் ஊரிலே பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பெருநிலக்கிழார்கள் மரபிலே வாழ்ந்தவர் பெரியண்ணக் கவுண்டர். அவரின் முன்னேர் சித்த வைத்தியத் துறையிலும் சோதிடக் கலையிலும் சிறந்து விளங்கியவர்கள். அவர்களின் வழியில் வந்த பெரியண்ணனும் அத்துறைகளிற் பாண்டித்தியம் பெற்ற பெரியவராயிருந்தார்.

அவர் நஞ்சம்மையார் என்னும் மங்கை நல்லாளை மணந்து, மைந்தர் மூவரையும் பெண்கள் மூவரையும் பெற்ற பின், 11-3-1898 ஆம் நாளில் பெற்ற ஆண் குழந்தைக்குச் சின்னு எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார்கள். சின்னு இளமையிலேயே படிப்பாற்றலும் விவேகமும் உள்ளவராய் வகுப்பில முதற்பிள்ளையாய்ப் படித்து வந்தார். நாடகங்கள் எழுதுவதிலும் நடிப்பதிலும் அவருக்குத் திறமை கைகூடியிருந்தது அவரின் படிபபாற்றலைக் கவனித்த பெற்றேரும் பெரியவர்களும் அவரை இங்கிலாந்துக்கு அனுப்பி, கௌரவம் மிகுந்த ஐ சி. எஸ் உத்தியோகத்தராக்குவதற்கு விரும்பி ஆவன செய்து வந்தனர்.

பிறசிடென்சி கொலிஜ் என வழங்கும் சென்னை மாநிலக் கல்லூரியிற் படித்தபோது, விக்ரோறியா விடுதியில் உறைந்த காலத்தில் அவருடன் அவிநாசிலிங்கஞ் செட்டியார், கிருஷ்ணன், நம்பூதிரி முதலானேரும் தங்கி வாழ்ந்து படித்துவந்தனர். ஒரு நாள் சுவாமி விவேகானந்தரின் புத்தகம் ஒன்றைப் படித்த சின்னு, தான் இங்கிலாந்துக்குப் போகும் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். அவரின மனமாற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு. அவருக்கு வாய்ப்பாக ஒரு சந்தர்ப்பம் உண்டானது.

இராமகிருஷ்ண மடத் துறவியர்களும்,பகவானின் சீடர்களுமான பிரமானந்தர், சிவானந்தர் எனனும் பெரியார்கள் இருவரை நண்பர்களுடன் சென்று கண்டு, திசைமாறிய சின்னு துறவுபூண்டு, விவேகானந்தரைப் போலத் தாமும் தொண்டு செய்தல் வேண்டும் எனப் பெரிதும் விரும்பினர். மக்களுக்குச் சேவை செய்யும் பணியே மகத்தான தொணடு எனக் கருதினர்.

கல்கத்தா சென்று சமஸ்கிருதம் படிக்கப் போவதாகப் பெற்றேருக்கு எழுதிவிட்டு, அங்கு சென்றவர் பேளூர்மடத்திற் சேர்ந்து, 1923ஆம் ஆண்டில் பிரமச்சரிய தீட்சைபெற்று ஸ்ரீ திரையம்பகச்சைதன்யர் என்னும் பெயர்புனைந்து தொண்டரானர்.

இராமகிருஷ்ண மடத்திற்குத் தொண்டராய திரையம்பகர் மடச்சம்பிரதாயங்களையும் சேவையையும் நன்ருகச் செய்முறைகளில் பழகிக்கொண்டார். மடத்தையும் சூழலையும் தூய்மையாக வைத்திருப்பதில் அவர் சிறப்பான பயிற்சியைப் பழகிக்கொண்டார். கல்கத்தாவிலிருந்த காலத்திலேயே அங்கிருந்து பல திருத்தலங்களுக்கும் சென்று யாத்தரை முறைகளையும் பழகிக் கொண்டார். தனித்திருந்து தவஞ்செய்யவும் பழகிய இவர்,இராமகிருஷ்ண மடமொன்றைப் பரிபாலிக்கும் பொறுப்பையும் பெற்றிருந்தார்.

உதகமண்டலத்துக்கு இராமகிருஷ்ணமடம் உருவாக்குவதற்குப் பெரியண்ணன் கௌண்டர் பெருமளவு பொருள் கொடுத்தவினர். திரையம்பகச்சைதன்யர் தாம் இளமையில் மனதைப் பறிகொடுத்த சிவானந்த சுவாமியாரிடம் 1926 ஆம் ஆண்டில் சன்னியாச தீட்சை பெற்றுச் சித்பவானந்தர் என்னும் சன்னியாசநாமம் பெறறுர்.இவரின சன்னியாசப் பிரவேச கிரியைகள் நடைபெற்ற வேளையில், எவ்வித நோயுமின்றி பெரியண்ணன் கௌண்டர் காலமாயினர் என்பர்.

சன்னியாசியாகியதும் 1926 முதல் 1940 வரை இவர் உதகமண்டலத்திலே உறுதியான பணிகள் செய்து பெருமதிப்புப் பெற்ருர். சகோதர சன்னியாசிகள் இவரின் சேவைத்துறனை வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். இவர் 1940 ஆம் ஆண்டில் திருப்பராய்த்துறையில் தங்கியிருந்தபோது, அந்தச் சூழலில் மடமமைத்துப் பிளளைகளை மனிதராககுதல் வேண்டும் எனச் சிந்தித்துச் செயலில் இறங்கினர்.

இவர் 1942 ஆம் ஆண்டில் ஆரம்பித்த திருப்பராய்த்துறைத் தபோவனத்தின் ஆரம்பவிழாவில் ஈழத்துப் பெரியவரான விபுலானந்த அடிகளார் ஆசிவழங்கி உரையாற்றினர்கள் என்பர். அதன்பின் சிதபவானந்தசுவாமிகள் ஸ்ரீ விவேகானந்த வித்யாவனபபள்ளி என்னும் கல்வி நிலையத்தையும் தாபித்துப் பிள்ளைகளை மனிதராக்க, எதிர்காலச் சமுதாயத்தை நல்ல நிலையில் நிலவுவதற்கு வழிவகுத்துப் பணி புரிந்தார்.

பழைய காலத்துக் குருகுலக்கல்வி முறையையும் இக்காலத்துக் கல்வி முறையையும் சேர்த்து நல்ல திட்டத்தைத் தயாரித்துப் படிக்க வைத்தபோது, வாழ்க்கைப் பயிற்சியை இன்றியமையாததாகக் கொண்டார்.ஒழுக்கம்,தூய்மை, எளியவாழ்வு சேவைமனப்பான்மை என்பனவாகிய நல்லறங்கள் பிள்ளைகளிடம் படிந்தன.

பின்னர் குருகுலமுறையில் உயர்நிலைக்கழகமும் கல்லூரியும் திருவேடகம் என்னும் திருத்தலத்தில அமைத்து நடத்தியமை போலப் பெண்களுக்குச் சேலத்தில சாரதா சமிதி அமைத்தார்கள். இதன் கிளைகள் திருநெல்வேலி, மதுரை, மன்னர்க்குடி ஆகிய இடங்களில் அமைவதற்கு வழிவகுத்தார்கள்.

சிறியவர்களை மனிதராக்க முயன்றதோடு பெரியவர்களை உய்தியடையச் செய்வதற்கு ஆங்காங்கே அந்தர்யோகம் அநுட்டிக்கும் பழக்கத்தை நடத்தி வந்தார்கள். உலக விடயங்களினின்றும் மனத்தைத் திருத்தி இறைவனிடம் படியச் செய்வதற்கு அந்தர்யோகமும் நல்லவர் பெரியவர்களின் திருக்கூட்டமும் பேருதவி புரிந்தன.

மாதாந்தம் இவர் தமது ஆச்சிரமத்திலிருந்து வெளியிட்ட சஞ்சிகை தர்மசக்கரம் என்பதாகும். இதை இவர் முப்பத்து நான்கு சக்கரங்களில், ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு ஆரங்களாக அமைத்துள்ளார்கள். இவர் உருட்டிய தர்மசக்கரத்தில் வந்த உபதேச வாக்கியங்களையே மில்க்வைற் செய்தியில் அருள் விருந்து என்னும் தலைப்பில் அவ்வப்போது வெளியிட்டு வந்தோம்.

இவ்வாருகப் பல்லாயிரக்கணக்கான மக்களை ஆன்மீக வாழ்வில் ஈடுபடச்செய்து, 'ஆனந்தமாக இருங்கள், சிறப்பாகச் செய்யுங்கள்' என்றெல்லாம் ஆசீர்வதித்து வந்தவர்தாமே ஆனந்தமாக அப்பரைப்போல நீண்டகாலம் வாழ்ந்து தமது எண்பத்தெட்டாம் அகவையில் 16-11-1985 ஆம் நாளில் அனந்த சமாதியடைந்தார்கள்.

(நன்றி: விபுலானந்த அடிகள் நினைவு-மில்க்வைற் வெளியீடு)

வியாழனன்று சுதந்திரதினம்

# எதிர்ப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் அரசு தடை!

(லாகூர்)

**எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ள சுதந்திரதின விழாவில் எதிர்க்கட்சிகளால் அமைதிக்கு குந்தகம் விளையலாம் என பாகிஸ்தான் அரசு அஞ்சுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

இத்தினத்தன்று அரசாங்க ஆதாரவாளர்களுக்கும், எதிர்க் கட்சிக் குழுக்களுக்கும் இடையே மோதல்கள் உண்டாகலாம் என அரசாங்க வட்டாரங்கள் கருதுகின்றன.

எனவே அன்றைய தினம் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கூட்டங்கள் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது

மந்திரிசபையின் இத் தீர்மானத்தை பிரதம மந்திரி திரு. ஜுனெஜோ வானொலி, தொலைக்காட்சி மூலம் நிகழ்த்திய உரைகளின்போது அறிவித்தார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்க எத்தனிக்கும் எதிர்க்கட்சிகள் சுதந்திரதினத்தன்று அரசியல் மோதல்களை உண்டுபண்ணி கலவரத்தைத் தோற்றுவிக்க முற்படுகின்றன என அவர் குற்றஞ்சாட்டினர்.

தற்போதைய ஆட்சியை அகற்றி ஜனநாயகரீதியில் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென செல்வி பெனஸிர் பூட்டோ மிகத்தீவிரமாக வற்புறுத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அலை கடல் நடுவே

## திசைமாறிய 147 பேரை கனடா காப்பாற்றியது!

(ஒட்டாவா)

அலைகடல் மத்தியில் திக்குத் திசை தெரியாது ஐந்து நாட்களாக அல்லலுற்ற 147 பேரை கனடா கடல் பகுதி அதிகாரிகள் காப்பாற்றியுள்ளனர்.

இவர்கள் இரு கட்டுமரங்களில் காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனுல் இவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற விபரம் தெரியவில்லை என்றும் பெரும்பாலும் ஆசிய நாட்டவராக இருக்கலாம் எனக் கருதப்படுவதாகவும் அறிய முடிகிறது.

## நியூஸிலாந்து- அமெரிக்க நட்புறவில் விரிசல்

(வெலிங்டன்)

அமெரிக்க அணுவாயுதக் கப்பல்கள் உட்பட எந்த அணுவாயுதக் கப்பல்களும் தனது துறைமுகத்துக்குள் நுழையக்கூடாது என்ற நியூஸிலாந்து அரசாங்கத்தின் அறிவிப்பையடுத்து அமெரிக்கா எதிர் நடவடிக்கைமேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நியூஸிலாந்து அரசாங்கத்தின் இவ்வறிவிப்பினுல் மனக்கசப்புற்ற அமெரிக்கா நியூஸிலாந்துக்கான பந்தோபஸ்து உத்தரவாதத்தை முற்ருக வாபஸ் பெற்றுக்கொண்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அங்கோலா மீது

## தென்னுபிரிக்க துருப்புகள் மீண்டும் தாக்குதல்!

(லண்டன்)

தென்னுபிரிக்கத் துருப்புகள் மீண்டும் அங்கோலா மீதுதாக்குதல் நடத்தியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அங்கோலா நகரொன்றின் மீது யுனிட்டா கிளர்ச்சியாளரின் உதவியுடன் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அங்கோலாப் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும் இதனுல் உண்டான சேதவிபரங்கள் குறித்து தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## 91 வானொலி நிலையங்கள்

(புதுடில்லி)

இந்தியாவின் இப்போது மொத்தம் 91 வானொலி நிலையங்கள் செயற்படுவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

## தாய்லாந்தில் புதிய அரசு

(பாங்கொக்)

தாய்லாந்தில் பிரதமர் தீ. சுசிலாந்தா 45 உறுப்பினர் கொண்ட புதிய அமைச்சரவை ஒன்றினை உருவாகியுள்ளார்.

சமீபத்தில் இங்கு தேர்தல் நடைபெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

## றீகனின் நம்பிக்கை

(வாஷிங்டன்)

அணுவாயுத உற்பத்தி தொடர்பாகத் தற்போது மாஸ்கோவில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் நன்மை பயக்கும் என அமெரிக்க ஜனுதிபதி திரு. றெனுல்ட் றீகன கருத்து வெளியிட்டுள்ளார்.

ஆயுதக்கட்டுப்பாடு தொடர்பான சோவியத் யூனியனின் புதிய யோசனைகளைத் தான் வரவேற்பதாகவும் திரு. றீகன் தெரிவித்துள்ளார்.

## சமாஜம் உருவானது

மிருசுவில் பகுதி சனசமூக நிலையங்களின் சமாஜத்துக்கான அங்குராப்பணக் கூட்டம் அண்மையில் மிருசுவில் உப அலுவலகத்தில் தகுதி வாய்ந்த உத்தியோகத்தர் திரு·கே கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.செ·தவநாயகம் சமூகமளித்திருந்த இக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-ச.குமாரவேலு, உப தலைவர்- த·சிவப்பிரகாசம், செயலாளர்-தா. இலங்கநாயகம்,உப.செயலாளர்-க மு ·சிவகுரு, பொருளாளர்-வி. கருணுநிதி இருவர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

ஈழமுரசு

# காயமுற்ற கேர்ணலின் காலுக்கு 'பிளேட்' பொருத்தப்பட்டுள்ளது!

கடந்தமாதம் இருபத்தி எட்டாம் திகதி யாழ். கோட்டை இராணுவ முகாமின் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது படுகாயமடைந்த கேர்ணல் ஹப்பு ஆராய்ச்சிக்கு இங்கிலாந்திலுள்ள வைத்தியசாலையொன்றில் வைத்து முறிந்த அவரது காலுக்கு 'பிளேட்' ஒன்று பொருத்தப்பட்டதாகவும் அதன் பின்னர் அவர் தற்பொழுது கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

கிராமசேவகர் இல்லாததே காரணமாம்!

# கிளிநொச்சியில் பாதிப்புற்றோருக்கு இலவச உணவு வழங்குவதில் தாமதம்!

(பரந்தன்)

கிளிநொச்சியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் இடம்பெயர்ந்து வேறிடங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கான இலவச உணவு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இலவச உணவுப்பொருட்களைப் பெறுவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்காக பல இடங்களிலிருந்தும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு வந்திருந்த பெருந்தொகையானோர் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர்.

கடந்த மாதம் கிளிநொச்சியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களை அடுத்து சுமார் 5385 குடும்பங்கள் பல்வேறு இடங்களிலும் சென்று தங்கியுள்ளனர். இவர்களுக்குக் கடந்த 6-ம் திகதி முதல் ஒரு வாரத்துக்கான இலவச உணவுப்பொருட்களைப் பெறுவதற்கான அனுமதிப்பத்திரம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பெருந்தொகையானோர் நேற்று உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு வந்திருந்தனர். எனினும், இவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை.

பலமைல் தூரங்களில் இருந்தும் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வந்திருந்த இவர்கள் ஏமாற்றத்துடன் கச்சேரிக்குப் படையெடுத்தனர். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அங்கு கூறப்பட்டதாம்.

கடந்தவாரம் முதல் கிளிநொச்சிக் கிராமசேவையாளர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதும், இவரது இடத்துக்குப் பதிற் கடமை புரிவதற்கு வேறு எந்தக் கிராம சேவையாளர்களும் முன்வராததுமே மேற்படி இலவச உணவுப் பொருட்கள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கான காரணம் என அறியப்படுகிறது.

பல்கலைக்கழக விவகாரம்

## நிர்வாகத்தினர் மௌனம்; மாணவர் குழு அமைத்தனர்

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று ஏற்பட்டுள்ள நிலைபற்றி ஆராய்வதற்காக நேற்று நடைபெற்ற கூட்டத்தில் மாணவர்களின் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று மாணவர்களால் நியமிக்கப்பட்டது.

இக்குழுவே மாணவர்களின் சார்பில் இப்பிரச்சினை சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இக்குழுவின் ஆலோசனைக் கூட்டம் நேற்று மாலை நீண்டநேரம் நடைபெற்றது.

இதேவேளையில்பல்கலைக்கழக மாணவர்கள் நேற்றும் ஐந்தாவது நாளாக விரிவுரைகளுக்குச் செல்லாது வகுப்புக்களைப் பகிஷ்கரித்தார்கள்.

பல்கலைக்கழக நிர்வாகம், மாணவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக எவ்வித பதிலையும் அளிக்காமல் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகின்றது.

## கடலில்பிடிபட்ட ஆறுஇளைஞர் தள்ளாடி முகாம் காவலில்

கடந்த மாதம் படகில் செல்லும்போது மன்னார் கடலில் கடற்படையினரால் பிடிக்கப்பட்ட ஆறு யாழ்ப்பாண பகுதி இளைஞர்கள் மன்னார் தள்ளாடி முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த அ. சிந்தாதுரை (40), அ. கிறிஸ்ரி (23), சி. துரைராசா (31), மற்றும் வல்வெட்டித்துறையை சேர்ந்த அ நித்திய செல்வன்,க.பாலகணேஷ்(21), த. பிரேமதாஸ் (28) ஆகியோரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக இவர்களின் உறவினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

செல்வா ஸ்தூபி அருகில் சுடப்பட்ட

## அந்த இளைஞரின் சடலம் ஆஸ்பத்திரி சவச்சாலையில்!

கோட்டைக்கு அருகிலுள்ள தந்தை செல்வா நினைவு ஸ்தூபி அருகில் நேற்றுக்காலை காணப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று பிற்பகல் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ். வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தலைமயிர் ஒட்ட வெட்டப்பட்டு நீலநிறபெல்சும் பிறவுண் நிற செக் சேர்ட்டும் அணிந்திருந்தஇந்த இளைஞரின்கையில் தொப்பி ஒன்றும் காணப்பட்டது. பயங்கரம் என அழைக்கப்படும் உதயகுமார் (25) என்பவரின் சடலமே இதுவெனவும் இவர் ஒரு சித்தசுயாதீனமற்றவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சடலத்தின் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்காயம் காணப்படுகின்றது. நேற்று முன்தினமிரவு செல்வா நினைவு தூபிக்கு அருகில் இவர் நடமாடியபோது கோட்டையிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### வடபகுதி...

பகுதியிலுள்ள மக்கள் ஒத்துழைத்து அவர்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்விளைவுகளை தவிர்த்துகொள்ள வேண்டுமெனவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

சில தினங்களுக்கு முன்னர் யாழ்நகரில் நடந்த ஷெல் தாக்குதலில் சிலர் கொல்லப்பட்டது குறித்து அவ் அதிகாரி குறிப்பிடுகையில், தீவிரவாதிகள் பாதுகாப்பு அரண்களை அமைப்பதனை தவிர்ப்பதற்காகவே அத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றார்.

முகாமுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு முகாம்களை தீவிரவாதிகள் அகற்றுவிடின் அதனால் பொது மக்களுக்கு ஏற்படப் போகும் விளைவுகளுக்கும் அவர்களே பொறுப்பேற்க வேண்டும். இதனால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களுக்காக மனவருத்தப்படுகிறேன் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### சாராயமும்...

பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கோட்டைக்குள் இருப்பவர்களின் கோரிக்கையின பேரில் 'இப் பரிசுப் பொருட்கள்' கடந்த சில தினங்களாக வெளியில் இருந்து உள்ளே செல்பவர்களினால் எடுத்துச் செல்லப்படுகின்றனவாம்.

### கோரிக்கைகள்...

தல்கள் உடல், உள ரீதியில் பாதிக்கும் செயல்கள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படக் கூடாது. அவை களைந்தெறியப்பட வேண்டியவை.

ஜனநாயக உரிமைகளுக்காக போராடும் இந்நேரம் அவ்வுரிமைகள் எவரால் மறுக்கப்பட்டாலும் அவை கண்டிக்கப்பட வேண்டும். எந்தப்பிரச்சினையையும் அறிவு ரீதியாக அணுகி ஆராய்தலே சரியான நடைமுறையாகும்.

பல்கலைக்கழக மாணவர் தொடர்பான எந்த பிரச்சினையையும் பல்கலைக்கழகத்தை நிர்வகிக்கின்ற நிர்வாகத்தினூடாகவும், மாணவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர் அமைப்பினூடாகவும் அணுக வேண்டும். இந்த வகையில பல்கலைக்கழக தனித்துவம் பேணப்படவேண்டும்.

இந்த அமைப்பு தமது கோரிக்கைகளை நிறைவேற்ற பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கியுள்ளதுடன் அவை நிறைவேறுவிடில் தொடர்ந்து போராடவிருப்பதாகவும் அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில்

## பிரதான பாடசாலைகளில் பல பொருட்கள் கொள்ளை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திலும் புனித திரேசா மகளிர் வித்தியாலயத்திலும் இனந் தெரியாதவர்களினால் பல பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் நடைபெற்ற அண்மைக்கால அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இயங்க முடியாத நிலையிலுள்ள சுமார் ஐந்து பாடசாலைகளில் மேற்படி பாடசாலைகளிரண்டும் குறிப்பிடத்தக்கவைகளாகும். இப் பாடசாலைகளின் அதிபர்கள் பாடசாலையைப் பார்வையிடச் சென்றபோதே அங்குள்ள பெறுமதியான பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது.

கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்களும் இன்னும் பல பொருட்களும் களவாடப்பட்டுள்ளதோடு ஆசிரியர் விடுதிகளிலும் கதவுகள் உடைக்கப்பட்டு ஆசிரியைகளின் உடுபுடவை உட்பட பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

இப் பாடசாலை கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து சுமார் நாற்பது யார் தூரத்திலேயே அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### வனவிலங்கு...

வுள்ளது.

பெரும் தொகையான மக்கள் தினசரி இதனைப் பார்வையிட்டு வருகின்றனர். மறைந்த போராளி ஒருவரின் பெயரில் சரணாலயம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### கிளிநொச்சி...

மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. கே. பொன்னம்பலம் முல்லைத்தீவு அரசாங்க அதிபராக உடனடி பதவியுயர்வு பெற்றுள்ளார்.

## 70 பேர் பலி

(பட்னு)

பீகார் மாநிலத்தில் கங்கை நதியில் சென்றுகொண்டிருந்த பயணிகள் படகு நேற்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் எழுபது பேர் நீரில் மூழ்கி மரணமாகினர். இதுவரை இருபத்துநான்கு சடலங்கள் மீட்கப்பட்டன.

### வர்த்தகர்...

முன்னாள் மாவட்டசபைப் பிரமுகர் திரு. க. வேல்முருகு 'ஈழமுரசு'வுக்குத் தெரிவித்தார்.

இங்கு நேற்றிரவும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டது.

## புதிய டி. ஐ. ஜி. யாழ். விஜயம்

வட பகுதியின் புதிய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. டீ. ரீ. எம். சேனாரத்தின நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்து யாழ் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேசிய பின்னர் கொழும்பு திரும்பினார். திரு சேனாரத்தின முன்னர் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணப் பகுதிகளில் ஏ. எஸ். பி.யாக கடமையாற்றியவர்.

## புலிகளிடம் சிக்கிய முதலை

(வல்வெட்டித்துறை)

சுண்டிக்குளம் பகுதியில் ரோந்து சென்ற தமிழீழ விடுதலைப் புலிகள் அப்பகுதியில் ரோட்டோரமாகக் காணப்பட்ட ஒரு முதலையைப் பிடித்தனர். சுமார் 6 அடி நீளமுள்ள அந்த முதலையை இங்கு கொண்டு வந்தனர். சுடப்பட்ட இந்த முதலையை அநேக மக்கள் பார்வையிட்டனர்.

## நகை, பணம் கொள்ளை

(கல்வியங்காடு)

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் உள்ள வீடு ஒன்றில் சுமார் ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியுள்ள நகைகளும், பணமும் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது. சங்கிலிகள், காப்புகள், மோதிரங்கள் ஆகிய நகைகளும் ஆறாயிரம் ரூபா பணமுமே களவாடப்பட்டவைகளாகும். இவைகள் யாவும் பாதுகாப்புக்காக வீட்டின் ஒரு பகுதியில் பேணி ஒன்றுக்குள் வைத்து மூடி வைக்கப்பட்டிருந்தன. வீட்டின் உரிமையாளரான திரு. மு. கந்தசாமி பத்தர் வீட்டில் தனிமையில் உறங்கிக்கொண்டிருந்த பொழுது இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

## ராணுவத்திடம் சிக்கினர்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் கிளிநொச்சி முகாமிலிருந்து இராணுவத்தினர் கரடிப்போக்குச் சந்திவரை ரோந்து சென்றனர், கண்டி வீதியைக் கடந்து உருத்திரபுரம் வீதிக்கு வந்த சிலர் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்டனர். இதைத் தொடர்ந்து பரந்தனிலும் பதற்றம் நிலவியது.

## கிளிநொச்சியில் பலர் கைது!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுக் காலை ரோந்து சென்ற ராணுவத்தினர், பலரைக் கைதுசெய்தனர். நேற்று கிளிநொச்சிக்கு விஜயம்செய்த பதில் அரசாங்க அதிபர் திரு. கே. ஸி. யோகேஸ்வரனிடம் அவர்களின் உறவினர்கள் இது பற்றி புகார் செய்தனர். கைதானவர்கள் மாலையில் விடுதலையானதாகத் தெரியவந்துள்ளது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 13-8-1986 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது: தொலைபேசி: 22487